**செய்தி வெளியீடு** ***நாள் : 26.11.2024***

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 281- ஆவது குழுமக் கூட்டம்**
**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று *(26.11.2024)* சென்னை, எழும்பூர் தாளமுத்து நடராசன் மாளிகையில் அமைந்துள்ள சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தலைமையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் 281-ஆவது குழுமக் கூட்டம் நடைபெற்றது.

இக்குழுமக் கூட்டத்தில் வடசென்னை வளர்ச்சித் திட்டங்களின் திட்டங்கள் குறித்தும், சென்னை பெருநகர எல்லைக்குள் நில உபயோக மாற்ற விண்ணப்பங்களின் மீது பரிசீலிப்பது குறித்தும், சட்டமன்ற கூட்டத்தொடரில் *2024-25* ஆம் ஆண்டு அறிவித்த அறிவிப்புகள் குறித்தும், மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நிர்வாக நடவடிக்கைகள் குறித்தும் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

இக்குழுமக் கூட்டத்தில் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் உள்ள *68* கழிவறைகள் மற்றும் *10* சிறுநீர் கழிப்பிடங்கள் கட்டணமில்லா கழிப்பிடமாக மாற்றப்பட்டுள்ளதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே உணவு தானிய அங்காடியில் *26* கழிவறைகள் கட்டணமில்லா கழிப்பிடமாக இருக்கும் பச்சத்தில் தற்பொழுது அனைத்து கழிவறைகளும் *(94* கழிவறைகள்) கட்டணமில்லா கழிப்பிடமாக செயல்பட ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. கோயம்பேடு வியாபாரிகள், வணிகர்கள், நுகர்வோர் மற்றும் வாகன ஓட்டுநர்கள் ஆகியோர்களின் நீண்டநாள் கோரிக்கைகளை ஏற்று இக்குழும கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இக்குழுமக் கூட்டத்தில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.சுதர்சனம் அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், குழும உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Verified RealEstate™